


ள் || திருவள்ளுவர் ஆண்டு 1979 ஐப்பசி 21 || விசு
சென்னை, 6—11—48 || 11




★ ★

காங்கிரஸ் கட்சியின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த தின விழாவை முன்னிட்டு தங்கத்தாலான அசோக ஸ்தூபி ஒன்றை சென்ற கிழமை பம்பாய் "பொது மக்கள்" அவருக்குப் பரிசாக அளித்தனர் என்று "தேசீய" ஏடுகள் தெரிவித்துள்ளன. ஆனல் படேலுக்கு தங்க ஸ்தூபி அளித்த "பொதுமக்கள்" யார் யார் என்பதை மட்டும் அந்த ஏடுகள் தெரிவிக்க மறந்து விட்டன. நமது ஓவியர் ஏ. கே. சாமி தேசீய ஏடுகள் விட்டுவிட்ட அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பரிசளித்த "பொது மக்களை" நமக்கு அறிமுகப்படுத்துகின்றார் இப்படத்தின் மூலம்!

ள் நாடு $1\frac{1}{2}$ அணா.
ஆண்டு சந்தா ரூ. 5

வெளி நாடு 2 அணா.
ஆண்டு சந்தா ரூ. 6



# கற்பனையின் மகத்துவம்!

[ம. சிங்காரவேலர்]

சூனியம் வைத்தல் என்ற வித்தையை (Art) சற்று விசாரிப்போம். இந்த வித்தையை மாரண வித்தை என்பார்கள். அதாவது ஒருவனை அழித்துவிடுவதற்குரிய வித்தை என்று சொல்லலாம். பழக்கத்தில் சூனியம் வைத்து ஒருவனை "எடுத்து விடுதல்" என்றும் சொல்லுவார்கள். அகால நோய் ஒருவனுக்கு வந்தால் அந்த நோயைச் சூனியத்தால் ஏவிவிடப்பட்டதென்பர்.

சுடுகாட்டிலிருந்து கொண்டுவந்த சில எலும்புகள், முக்கியமாக பெருவிரல்கள், ஓணான் தலைகள், ஆட்டு இறைச்சி, கோழி இரத்தம், தேரை (ஓர் வித தவளைவகை) மஞ்சள், குங்குமம், தேங்காய், பழம், அழுக்கடைந்த கந்தைத் துணி முதலாகிய அழுக்கான வஸ்துக்களைக்கொண்டு (Filthy things) சில மந்திரங்களை உச்சாடனம் செய்து (அதாவது) விளங்காத அர்த்தமில்லாத சொற்களைச் சொல்லி, எந்த ஆன்மாவையோ எழுப்புவதாக எண்ணி காயை உசுப்பிவிடும் மாதிரியாக எழுப்பிய ஆன்மாவையோ, பிசாசையோ, குட்டிச்சாத்தானையோ, எதிரியின் பேரில் விடுவதாக உத்தேசித்துக் கொண்டு பூஜையை நிறைவேற்றுகின்றார்கள். இந்த வித்தையில் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதுயாதெனில் ஆதிமுதல் அந்தம் வரை, எல்லாம் கற்பனைகளே. மந்திரங்களும் கற்பனை! (Dirty things) அசங்கிதவஸ்துக்களைக்கொண்டு பூத்தையோ, பிசாசையோ கன்னிகையையோ, குட்டிச்சாத்தானையோ எழுப்புவதும் கற்பனை, அவைகள் மூலமாக எதிரியைக் கொல்ல நினைப்பதும் கற்பனை. கற்பனை 'ஆன்மாக்களால்' நோய் உண்டாக்குவதும் கற்பனை! இந்தக் கற்பனைகள் ஒன்றோடொன்று கோர்க்கப்பட்டதால் உலகமே கற்பனைகளாலே மயங்கி வருந்துகின்றது.

சூனியம் வைத்தல் என்பது புராதனமான வித்தையே என்னலாம். யஜுர் (Yajur veda) வேதத்தில் இந்த கற்பனையைக் காணலாம். அசங்கித வஸ்துக்களால் பிசாசுகளை வசப்படுத்தலாமென்ற கோரிக்கை ஒரு காலத்தில் உலக முழுமையுமே பரவி இருந்தது. ஷேக்ஸ்பியர் (Shakespear) என்ற பிரபல ஆங்கில நாடகக் கவி மாக்பத் (Macbeth) என்ற நாடகக் கதையில் சூன்யக்காரிகள் மந்திரங்களால் அசங்கிதமான வஸ்துக்களால் பேய் பிசாசுகளை எழுப்புவதை நன்றாக வர்ணித்துள்ளார். இதைப்போன்ற கற்பனையை ஜர்மன் பிரபல கவியாகிய கீதே (Goethe) என்றவர் தன்னுடைய பிரபல நூலாகிய 'பாஸ்டில்' (Fawst) வரைந்துள்ளார். நமது நாட்டில் "சூனியம்" என்ற பித்தலாட்டம் கிராம மக்களை வதைத்து வருகின்றது. சூனியத்தால் கிராம முழுமையுமே பயந்து விடுகின்றது! சூனியக்காரனென்ற பித்தலாட்டக்காரனைக் கண்டதும், பாமர மக்கள் நடுங்குகின்றார்கள்! அறிவின்மையாலும் விசாரணை இன்மையாலும், வெறுங் கற்பிதச் சொற்கள் இவ்வளவு பயத்தை உண்டாக்குகின்றன. இதன் காரணமென்னவெனின் அறியாமையே. உடலில் நிகழும்செய்கைகள் யாவும்-நடத்தைகள் யாவும் நிகழ்கின்ற காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் "புருஷன்" என்ற தனிப்பொருள் ஆன்மா வடிவமாக, அல்லது பேய் பிசாசு வடிவமாக அல்லது குட்டிச்சாத்தான் வடிவமாக உடலில் உலாவுகின்றதாக எண்ணுகிறார்கள். இது முதல் கற்பனை. இக்கற்பிதப் புருஷர்களை சிற்சில கிரியைகளால் அவைகளுக்குப் பிரியமான வஸ்துக்களைக்கொண்டு வசியப்படுத்தலாமென்ற எண்ணம் இரண்டு. இத்தியாதி பேய் பிசாசுகளைக்கொண்டு, அதாவது அவைகளை வசியப்படுத்திக் கொண்டு, தங்கள் எதிரிகளின் பேரில் எந்த குட்டிச் சாத்தான்களையும் வெளியிடலாமென்ற' எண்ணம் மூன்று, இம் மூன்று எண்ணங்களால் சாமானிய மனிதர் நோய்கள் உண்டாகும் காரண காரியங்களைத் தெரிந்து கொள்ளாமல் மந்திர தந்திரங்களினால் அவைகள் உண்டாகலாமென்றும், அந்நோய்கள் மூலமாகப் பகைவரை வருத்தலாமென்றும் நம்புகின்றார்கள். இந்த மூட நம்பிக்கைக்கு ஆதாரமென்னவெனில் ஆன்மா ஒன்று உண்டென்ற மூட நம்பிக்கையேயாகும். இந்த மூடநம்பிக்கைபோன்ற இன்னொரு மூடநம்பிக்கையையும் நமது மக்களிடம் காணலாம். அதாவது "கழிப்பு எடுத்தல்" என்னும் ஓர் பழக்க முறை. இது பலவிதமாக பல வஸ்துக்களைக் கொண்டு அனுஷ்டித்து வரப்படுகின்றது! கழிப்பின் முக்கிய கருத்து என்னவெனின் சில வஸ்துக்களைக்கொண்டு சில்லறைத் தெய்வங்களாகிய முனீஸ்வரன், காளி அம்மன் முதலானோரின் அருளைப்பெறலாமென்பது. இதற்குச் செய்யவேண்டிய முக்கிய காரியமென்னவெனில் பலியிடுதல், அதாவது உயிரை, எந்த உயிராயினும், அந்தத் தேவதைகளுக்குச் சமர்ப்பித்து அந்தத் தேவதைகளால் உண்டானதாக எண்ணப்படும் சில நோய்களைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையே. இந்த நம்பிக்கையைச் சாமான்யரிடம் அதிகமாகக் காணலாம்.

சில்லறை நோய்களாகிய வயிற்றுப் போக்கு, சீதபேதி, குளிர் ஜுரம் இவைகளைப் போக்க தேங்காய்களைச் சமர்ப்பிக்கின்றார்கள். சில இடங்களில் தேங்காய்க் குடுமியில் மூன்று குச்சிகளை நுழைத்து அந்த குச்சிகளுக்கு கந்தைகளை சுற்றி தீ பற்றவைத்து நோயாளி முன் சுத்துகிறார்கள். இத்துடன் மிளகாயை நெருப்பிலிட்டு அதையும் நோயாளி முகத்திற்கெதிரில் சுற்றும் பழக்கம் மீன் பிடிக்கும் வலைஞரிடம் காணலாம். மலேரியா என்ற குளிர் ஜுரங்களுக்கு (Malarial Patient) காலணாவை மஞ்சள் கந்தையில் சுற்றி கையில் கட்டுகின்றார்கள். இதை குளிசம் என்று சொல்லுவார்கள். இத்தியாதி வஸ்துக்களுக்கும், வியாதி போவதற்கும் என்ன சம்பந்தமென்பதை அறியக்கூடவில்லை. ஆனால் இவை போன்ற பழக்கங்கள் உலக முழுமையுமே காணலாம். காட்டுமிராண்டிகளிடம் குளிசத்தை வெகு விநோத காட்சிகளுக்கெல்லாம் உபயோகிக்கின்றனர்! விரோதியை வெல்ல வேண்டுமானல் அதற்கு ஓர் குளிசம்' நோய் "காற்று" "கருப்பன்" படாதிருக்க வேண்டுமானால் அதற்கோர் குளிசம்; ஒரு பெண்ணை வசியம் செய்யவேண்டுமானல் அதற்கோர் குளிசம். இன்றைக்கும் சில

(11-ம் பக்கம் பார்க்க)

# கம்பரும் வம்பரும்!

[ஏ. பி. ஜனார்த்தனம். எம். ஏ]

[நண்பர் ஜனார்த்தனத்திற்கு இளைஞர் உலகம் சூட்டியுள்ள செல்லப்பெயர் டார்பிடோ என்பது! ஏனெனில் அவர் பேச்சு வேட்டுப்போடும் விதத்தது! பகைவர்கண்டு அஞ்சும் முறையில் வெடி குண்டுகளை வாரி வீசும் தன்மையது! வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்னும் போக்கில் அமைந்து கிடப்பது! ஆம்! அவருடைய சொற்பொழிவு ஒவ்வொன்றும் ஒரு டார்பிடோ முழக்கம்! பேச்சு மட்டுமல்ல, அவர்தம் எழுத்தும் அத்தன்மையதே என்பதை இக் கட்டுரை நன்கு விளக்கும்.]

அறப்போரில் நாம் ஈடுபட்டுள்ள நேரத்தில், வடநாட்டு பாசீசத்தை எதிர்ப்பதில் நம் சக்திகள் அத்தனையும் முழு மூச்சாக முனைந்துள்ள நேரத்தில், நமது சிந்தனை எல்லாம் எப்படி மொழிப் போராட்டத்தில் திராவிடரை எழுச்சியுறச் செய்வது என்பதிலேயே செலவழிக்கப்பட்டு வரும் இந்நேரத்தில், கம்பதாசர்கள் வம்பளந்துள்ளனர். வீம்பு பேசியுள்ளனர். அனுமார்களும் வீடணர்களும் சல்லடங் கட்டியுள்ளனர். அமைச்சர்கள் நாடாளும் பொறுப்பையும் அல்லலையும் மறந்து முறைத்தும் முணுமுணுத்தும் பதைத்தும் பதைபதைத்தும் பேசியுள்ளனர். மாம்பலமும் மைலாப்பூரும் மகிழ்ச்சி பூரிக்க பவனி வந்துள்ளன.

ஆம்! மவுண்ட்ரோட்டில் மூன்று வாரங்கட்கு முன்பு நடைபெற்ற நான்கு நாள் கூத்தைத்தான் குறிப்பிடுகிறேன். பாட்டும், கூத்தும் பேச்சும், கலந்து கலந்து கம்பப் பித்தை வெளியிட்ட அந்த கம்பர் மாநாட்டைத்தான் குறிப்பிடுகிறேன் அங்கு யானை, ஒட்டகம் ஊர்வலமாம்! ஓலைச்சுவடிகள் கண் காட்சியாம்! வெளுத்துக்கட்டி விட்டார்கள் அந்த வீணர்கள் நாம் வேறு களத்தில் புகுந்துள்ள நேரத்தில்!

கம்பதாசர்களின் வாதங்களை நாம் தவிடு பொடியாக்கி விட்டோம் ஏற்கனவே! சுயமரியாதைச் சூறாவளியில் சிக்கி கம்பன் படாதபாடு பட்டான் அன்று! முன்னாளில் களத்திலிறங்கிய நாவலர் பாரதியார் இந்த மாநாட்டில் காணோம்! அன்று வீரகர்ஜனை புரிந்த சேதுப்பிள்ளை இன்று நமக்கேன் இந்தத் தொல்லை என சுருதியைக் குறைத்துக் கொண்டார். அன்று கலெக்டர் துரைக்குக் காவடி எடுப்போம் என்று முகாரி வாசித்த பண்டிதமணியும் இப்போது காணோம். ஆனால், கம்ப ராமாயணத்திற்கு "ரிபேர் ஷாப்" வைத்துள்ள T. K. C. யும் இலக்கிய மராமத்தில் புகுந்துள்ள பக்தவச்சலமும், தமிழுக்குக் கம்பரே கதி என்று கண்டு பிடித்துள்ள ஓமாந்தூராரும் கல்கியும் ஏனைய ஆரிய வீரர்களும் தான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

கம்பன் கலைச் சுவையில் மூழ்கட்டும் இவர்கள், நமக்குக் கவலையில்லை. அயோத்தி வர்ணனையில் மூழ்கி, வேண்டியமட்டும் இவர்கள் கம்ப ரசம் பருகட்டும், அதுபற்றியும் நமக்குக் கவலையில்லை.

ஆனால், சுயமரியாதைக்காரனை இவர்கள் ஏன் வம்புக்கிழுக்க வேண்டும்? அறிவியக்கத்தாரை ஏன் இவர்கள் தாக்கவேண்டும்? அதுதான்நம் கேள்வி.

ஆரியர் பேச்சைக் குறித்துக் கவலையில்லை. அது அவர்கள் இனப்பண்பு. T. K. C. யைக் குறித்தும் கவலையில்லை. காரணம் அவர் கலியுகக் கம்பர். ஆனால் பிரதமர் ரெட்டியார் பேச்சுக்குப் பதிலளிக்க வேண்டியது நமது கடமை.

அவர் வள்ளுவரும் கம்பருமே தமிழ் இலக்கியத்துக்குக் கதி எனப் பேசியிருக்கிறார். தமிழர் அறத்தை அழகாக, ஆணித்திறமாக வலியுறுத்தியுள்ள வள்ளுவருடன் கம்பரைச் சேர்ப்பது வள்ளுவருக்கு மாசு தேடுவதாகும். கம்பர், ஆரியக் கூத்துக்குத்தாளம் போட்ட, தமிழ்ப் பண்பை மறந்த, தமிழ் அறநெறியை மறைத்த, கவிஞர். அவருடனா ஒப்பிட்டுப் பேசுவது அந்த அறநெறி வகுத்த அரும்பெறல் கவிஞர் திருவள்ளுவரை? தகுமா இது? நீதியா? முறையா? நியாயமா இப்போக்கு? கண்ணியமே உருவான ஓமந்தூரார் உரைக்கக் கூடியதா இவ் வாசகம்?

கம்பன் கற்பனையில் கண்ட இராம இராஜ்யமே அறப் பேருலகமாம். கூறுகிறார் முதலமைச்சர் சற்றும் கூச்சமின்றி! சம்புகனைக் கொலை செய்து ஆரிய தர்மத்தைக் காப்பாற்றியது இராமரின் அரசியல் அறம். வாலியை வஞ்சகமாக வீழ்த்தியது இராமரின் அரசியல் அறம். வண்ணான் பேச்சைக் கேட்டு கர்ப்பத்துடன் சீதையைக் காட்டுக்கு அனுப்பியது இராமரின் அரசியல் அறம்! இந்த அறம் நமக்குத் தேவையில்லை!

அடுத்தது கர்ஜனை! இடி முழக்கம்! கம்பராமாயணத்தைக் கொளுத்தத் துணிந்ததைவிட மடமை வேறு இருக்கமுடியாது என்கிறார் முதலமைச்சர். எது மடமை? ஓமாந்தூராரே, எது மடமை? அடிமை இலக்கியத்தை அறக்களஞ்சியம் என அரற்றுவது மடமையா? அதைச் சுட்டெரிப்பது மடமையா? இனத்தைக் காட்டிக் கொடுத்த இளிச்ச வாயனின் இலக்கியத்தை விலக்குவது மடமையா? கடைந்தெடுத்த ஐந்தாம் படைக்காரனின் இலக்கியப் படைப்பை மகிழ்ந்து புகழ்வது மடைமையா? ஆம்! கம்பராமாயணத்தின் புரட்டை மறைப்பது தான் மடமை. கம்பனை கவிச்சக்கரவர்த்தி எனப்புகழ்வதுதான் மடமை. அந்த மடமையினின்றும் மக்களைக் காக்கவேதான் கம்ப ராமாயணத்தைத் தீயிட வேண்டுமென நாம் சொன்னோம்—சொல்கிறோம். மடமையிலிருந்து மக்களை விடுவிப்பது தவறா? சொல்லலாமா ஓமந்தூர் இப்படி?

கம்பன் கண்ட இராமன் ஆரியனுமல்லவாம், திராவிடனுமல்லவாம். இது ஓமாந்தூராரின் சாதனை. இலக்கிய நயத்துக்குப் படியுங்கள் கம்பனை என ஒப்பாரி வைக்கட்டும் ஓமந்தூரார், நமக்குக் கவலையில்லை. ஆனால் அடிப்படை உண்மையை, வரலாற்று வல்லுநர்கள் வரையறுத்துக் கூறிய உண்மையை, இந்தியப் பிரதமர் ஜவகர்லால்நேரு, ஒப்புக்கொண்டுள்ள உண்மையை, இராமாயணம் என்பது ஆரிய இராமனுக்கும் திராவிட இராவணனுக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தைச் சித்திரிக்கும் சுவடி என்னும்

உண்மையை, இராமாயணத்தில் குரங்குகள் கரடிகள் என்றெல்லாம் இழித்துரைக்கப்படுவோர் திராவிடர்களே என்னும் உண்மையை; ஆரியரை உயர்த்தியும் திராவிடரைத் தாழ்த்தியும் கூற வந்த நூலே கம்பன் காதை என்ற வரலாற்று உண்மையை மறைக்கப் பார்ப்பது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, மாபாதகம்கூட! என்ன இருந்தாலும் கம்ப பித்துக்கும் ஓர் எல்லையில்லையா? T·K·C· கூட இவ்வளவு தூரம் அழுத்திப் பேசியதில்லையே!

இராமன் ஆண்ட இராஜ்யம் அறம் தழைத்த வளநாடாம். உண்மை. ஆனால் ஒரு திருத்தம்! ஆரிய அறம் தழைத்த வளநாடு அது! அடுத்தாற்போல் கூறுகிறார் ஓமந்தூரார், சீதை கற்பினுக் கணிகலம் என்று! இராமரே சீதையின் கற்பில் ஐயங்கொண்டு அவளைக் காட்டுக்கனுப்பியதை அறியாரா இந்த ஆளவந்தார்?

அனுமனையனைய பக்தி வேண்டுமாம். மேலும் கூறுகிறார் ஓமந்தூரார்! ஆம், வடவாரியனுக்கு ஆள் தந்து, பாலங்கட்டி, போரிட்டு, அடிமைப் பணி புரிந்த அனுமனை ஓமாந்தூரார் புகழ்வதில் வியப்பில்லை. தம் விமானத்துக்கு ‘அனுமான்’ என்ற அருமைப் பெயரைத் தந்தவர்தானே இவர்! இந்த விமான ‘அனுமான்’ டில்லி தேவதைகளிடம் சென்னை சர்க்கார் தாழ்ந்து பணிவதற்குத்தானே பயன்படுகிறது? பிறகு, ஏன், இவர் அனுமனைப் புகழமாட்டார்?

இலங்கையை வென்றதும், மீண்டும் அதை அரக்கர்க்கே தந்தது இராமரின் பெருங் குணமாம்! கூறுகிறார் முதலமைச்சர் இராஜதந்திரக் கலையின் பால பாடங்கூட அறியாமல்! அண்ணனைக் காட்டிக் கொடுத்த வீடணனுக்கு, அவன் செய்த ஐந்தாம் படை வேலைக்காக, அவனுக்குக் கைமேல் கிடைத்த பலன் இலங்கை அரசு! இராமர் இலங்கை ‘முடி’யை வீடணனுக்குத் தந்தது பெருங் குணத்தால் அல்ல, தாராளத் தன்மையால் அல்ல, வீடணன் தன் நாட்டை, இனத்தை, அண்ணனை இராமனுக்குக் காட்டிக் கொடுத்தானே அந்தத் துரோகத்திற்கு இராமன் தந்தபரிசு இலங்கை! அவன் செய்த ஐந்தாம் படை வேலைக்கு ஈடாக அவன் பெற்ற பலன் இலங்கை முடி! போரிலே வெற்றி பெறுவதற்கான குறுக்கு வழி, பகைவர் கோட்டத்திலிருக்கும் மிக முக்கியமான ஒருவனை ஏதேனும் ஆசைகாட்டி அங்கிருந்துகொண்டே தனக்காக வேலை செய்யும்படி செய்து விடுவது! சுருக்கமாகச் சொல்வதானால் தனக்கு ஐந்தாம் படைக்காரனாக இருக்கும்படிச்செய்வது! இராமன், பகைவர் கோட்டத்திலிருந்து பெற்ற ஐந்தாம் படைக்காரன் வீடணன், அந்த ஐந்தாம் படை வேலைக்காக இராமன் அவனுக்களித்த “கூலி” இலங்கை அரசுரிமை! இதைக்கூட நாடாளும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள ஓமந்தூரார் தெரிந்து கொண்டிருக்கவில்லை என்றால் அவருடைய நாடாளும் தகுதியிலேயே நமக்கு ஐயம் ஏற்படுகிறது என்பதை நாம் சொல்ல விரும்பவில்லை என்றாலும் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது!

சுயமரியாதைக்காரர்கள் வேறு களத்திலே உள்ளனர் என்ற தைரியத்தால், நம்மை “கம்பன் களத்திலே” நேருக்கு நேராகச் சந்திக்க அஞ்சும் பலர் இதுபோது நம்மைத் தாராளமாகத் தாக்குகின்றனர். தாக்கட்டும் பாபம், தாக்கித் தாக்கி ஓயட்டும்! தாக்கத்தானே அறிந்திருக்கிறார்கள் அவர்கள்! ஆகவே தாக்குகிறார்கள்! களத்திலே, எதிரி இல்லாத நேரத்தில், வேக வேகமாகப் போராடுகிறார்கள்! அவர்களுக்கு வெகு நாட்களாக நம்முடன் போராடவேண்டும் என்று. ஆசை, நாம் களத்திலே நிற்கும்போது நம்முடன் அவர்களால் போராடமுடியாது. அதற்கு வேண்டிய கருவிகளும் அவர்களிடம் கிடையாது. அதற்குத் தகுதியான முறைகளும் அவர்கட்குத் தெரியாது ஆகவே நாம் களத்திலே இல்லாத நேரமாகப் பார்த்து, போர் நடத்துகின்றனர். நடத்தட்டும், பாபம், அவர்கள் ஆசையும் தீர்ந்து போகட்டும். அதற்கு நாம் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?

ஆனால் ஒன்று! விரைவிலே இவர்கள் கண்ணெதிரிலேயே, இவர்கள், கண்டு அஞ்சும் விதத்திலே கம்பன் காதையைத் தீயிலிட்டுக் காட்டுவோம் (அடையாளமாகத்தான், எல்லா ஏடுகளையுமல்ல!) அந்தத் தீயிலே இவர்கள்தம் மடமை உள்ளமும் தீய்ந்து போகட்டும்!

விரைவில் நாம் தீ மூட்டுவோம்— கம்பதாசர்களுக்கு நேர் வழி எது என்பதை எடுத்துக்காட்ட! ஆர்ப்பாட்டக்காரர்களின் கொட்டத்தை அடக்க! இனத்துரோகம் அடாது, ஆகாது என்பதை நானிலத்துக்கு அறிவிக்க!

T. K. C. களும், கல்கிகளும், பக்தவச்சலங்களும் ஓமந்தூரார்களும் தீயணைக்கத் தயாராகட்டும்.

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அதுபோலவே சுடுகாட்டு எலும்புகளும், மனிதனுடைய பெருவிரலும் குரங்கு நகங்களும் அடுத்த வீட்டுக்காரன் குழந்தையின் சுகத்தை எப்படிக் கெடுக்கும்? ஆதலின் சூனியத்தால் ஒருவனைக் கொல்வதாவது நோயில் விழச் செய்வதாவது குதிரைக்குக் கொம்பு முளைத்தது என்று கேட்பதையே ஒக்கும்.

முதலில் பிள்ளையின் பெருவிரலாலும் ஓணான் பல்லிவால் துண்டுகளாலும், ஆமை ஓட்டாலும், தவளை, தேரையாலும், ஒருவனை சாகவைக்கக் கூடுமானால், சண்டைக்கு சேனைகளேன்? அப்புவில் ஏன்? குண்டு துப்பாக்கிகளேன்? இரண்டொரு செத்துப்போன ஓணானையும்.எளிய குழந்தைகளின் பெருவிரலையும் கொண்டு சில மந்திரத்தைச் சொல்லி சேனைத் தலைவனை “எடுத்து” விடலாமே! அல்லது கெட்ட நடவடிக்கை என்பது மெழுகுவர்த்தியால் சரிப்படுத்தப்பட்டால் ஏன் ஒவ்வொரு சிறுவன்சிறுமியையும் மெழுகுவர்த்தியாலேயே திருந்தவைக்கலாமே! இது ஆபாசமான விஷயமென்றால் மெழுகுவத்தியினும் மிகக் குறைந்த வெளிச்சத்தைக் கொடுக்கும் ஒரு நட்சத்திரத்தால் நமது நடவடிக்கை ஆளப்படுமென்பது ஏன் ஆபாசவார்த்தை ஆகாது? ஆதலின் பில்லி; சூனியாதிகளும், சோதிடமும், எண்களும், மந்திர தந்திரங்களும் சில மோசக்காரர்கள் ஜீவனம் செய்து பிழைக்க ஏற்பட்ட சூழ்ச்சிகளேயொழிய அவ்வித்தைகளில் யாதாமொரு உண்மையுமில்லையென அறிக.

---

சிறு கதை:

# 'மாரியாத்தா'

[தி. வி. பாலு]

"ஆயி மகமாயி அவ ஆயிரம் கண்ணுடையா! ஆங்காரம் கொண்டவளை சீரழிய வச்சிடுவா!"

இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டுதான் அனுதினமும், வீதிகளில் வருவது வழக்கம், அந்தப் பிச்சைக்காரி—இல்லை — மாரியாத்தா! ஆம்! உடலுழைப்பில்லாமல் சோம்பேறித் தனமாகப் பிச்சையெடுத்து வாழும் முறைகளிலே இதுவும் ஒன்று. அவள் இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டு வரவேண்டியதுதான், வீட்டிலுள்ள அரிசி அவள் மடியில் வந்து நிறைந்துவிடும்.

"மாரியாத்தா!" இது ஊரார் அவளுக்கு இட்ட பெயர். வயது 24 தான் இருக்கும். நல்ல அழகுதான்! மாநிறம். ஆனால் இருந்த கோலமோ, நெற்றியிலே விபூதிப் பட்டை! அதன்மேல் காலணா அகலத்திற்குக் குங்குமப் பொட்டு! அள்ளிமுடியாது அவிழ்த்துவிடப் பட்ட முடி! இடையிலே வெள்ளைப் புடவை! கையில் அக்கினிச் சட்டியும், வேப்பிலையும்! பாடிக்கொண்டுவருவது மேற் கூறிய, "ஆயிமகமாயி" என்ற பாட்டு! இந்தக் கோலம், மக்களை மயக்கி அவளிடம் மதிப்பிடச் செய்தது!

ஆனால் இந்தக் கோலம் வாழ்நாள் முழுவதுமா? இல்லை, இல்லை!! பகல் மட்டும்தான் இந்தப் பகட்டு வேஷம்! இரவிலே.........! அது தான் கதை!

* * *

"தாயே! மாரியம்மா! மாகாளி! நீதான் காப்பாத்தனும். பத்து மாசம் சுமந்து நான் பெத்த என் மகனை! என் ஆசையிலே பால் வார்க்கணும். உனக்கு நாலு கெடாவின் இரத்தம் காண்பிக்கிறேன்! படுத்து மூணு நாளாச்சி, மூச்சு தான் விடறான், பேச்சு வார்த்தை இல்லையே! மகமாயி நீதான் கதி! என்று சொல்லிக் கொண்டே, செல்லாத்தா, தன் மகனுக்கு—சுப்பனுக்கு—உடம்பு பூராவும் விபூதி பூசுகிறாள், அம்மை வார்த்திருந்தபோது.

"இந்தா, செல்லாத்தா! நம்ப கிட்டே என்ன இருக்கு? ஆத்தா தான் அவனைக் காப்பாத்தனும். ஆத்தா நம்மைக் கைவிடமாட்டா!" என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டே செல்லாத்தாவைத் தேற்றுகிறான், கணவன் கந்தசாமி!

அம்மை வார்த்துவிட்டது ஒரே மகனுக்கு. செய்தி தெரிந்ததும், சுகாதார அதிகாரிகள் வந்து, அம்மை குத்தவும், வீட்டை சுத்தம் செய்யவும் கேட்டபோது, "மகமாயி கோபித்துக் கொள்ளும்" என்று மறுத்துவிடவே அரசாங்கக்குற்றத் தாக்கல் செய்து கொண்டு அவர்கள் சென்றுவிட்டார்கள். இதை கந்தசாமியோ, செல்லாத்தாளோ, இலட்சியப் படுத்தவில்லை. காரணம், அவர்களுக்கு அரசாங்கத்திடம் இல்லாத 'பயம்' "மாரியாத்தா"விடம் இருந்ததுதான்!

கந்தசாமிக்கும், செல்லாத்தாளுக்கும் கலியாணம் ஆகி தனிக் குடித்தனம் செய்தபோது பிறந்த முதல் குழந்தைதான் 'சுப்பன்!' இப்போது வயது எட்டு. அம்மையால் தாக்குண்டு படுக்கையிலே கிடக்கிறான்.

சுப்பனுக்கு அம்மை வார்க்கவே கந்தசாமி தன் மகனை மீட்பதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்று ஊரார் கூறினார்களோ அவ்வளவையும் செய்துவந்தான். இத்தனைக்கும் அவன் வேலை மளிகைக் கடையில் பொட்டலம் மடிப்பது! சம்பளம்! அதை எப்படி எண்ணிப் பார்த்தாலும் அது ரூபா 22 ஆகத்தான் இருக்கும்! முதல் தேதி பிறந்ததும் கடை கணக்கப் பிள்ளை சம்பளத்தை எண்ணி அவன் கையில் கொடுப்பார். வீட்டிற்குத் திரும்பும்போது, கந்தசாமி, தனக்குக் கிடைத்த சம்பளத்தை, மறுபடியும் மறுபடியும் எண்ணிப் பார்ப்பது வழக்கம். எத்தனை முறை எண்ணினால் என்ன? 22, 22 ஆகவேதான் இருந்தது! வளரவில்லை! அந்த 22 வெள்ளிக் காசுகள் போதுமா அவனுடைய குடும்பம் எனும் படகு வாழ்க்கைச் சூறாவளியால் தாக்குண்டு உடைந்து சிதறாமல் இருப்பதற்கு? ஆகவேதான் வட்டிக்கடை வாசுதேவனால் அவனுக்கு அபயமளித்தான்—ஆபத்பாந்தவனாக, அனாதரக்ஷகனாகக் காட்சியளித்தான்! ஆம்! சேட்ஜீ, கந்தசாமிக்குத் தாராளமாகக் கடன் கொடுத்தான்! சேட்ஜீயின் வட்டி விகிதம் அவனுடைய உருவத்தைப் போலவே கனமானது! வேகமாக வளரக் கூடியது கூட! வளர்ந்தது! வளர்ந்து வளர்ந்து, இப்போது, வட்டி, அசலைவிட பத்து மடங்கு பெரியதாக இருக்கிறது. இந்தக் கடன் தொல்லை தீர வேண்டுமென்று தினமும்தான் கந்தசாமி மாரி கோயிலில் இளநீர் அபிஷேகம் தயிர் பால் வெண்ணெய் சகிதமாக செய்து வருகிறான். ஆனால் அவன் பொருளாதார நிலையோ நாளுக்கு நாள் தேய்ந்துவந்ததே தவிர வளரவில்லை. எப்படி வளரும்? மாரியம்மன் மனசு வைத்தால் வளரும் என்று அவன் நம்பினான் ஆனால் மாரியம்மனுக்கு இவன் வறுமைக் கொடுமை

(8-ம் பக்கம் பார்க்க)

வெளிவந்துவிட்டது!

வாழ்வு

[சென்னை]

சிறந்த மாத வெளியீடு

தனிப்படி விலை 0 4 0

ஆண்டுத்தொகை ரூ. 3 0 0

பிரதிக்கு 8 அணா விதம் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

விபரங்களுக்கு:

டி. வாசுதேவன்,

39, ஹாசேன் மேஸ்திரி தெரு

ராயபுரம், சென்னை 13.

போர்வாள்

6—11—48 சனிக்கிழமை

# அறப்போர், மீண்டும்!

"ஹிந்தி எதிர்ப்பு கயா!"—ஏமாளிகள் சிலர் கூறினர்.

"புசுபுசுத்துப் போய்விட்டது போராட்டம்!"—பாதகதேவிகள் கொக்கரித்தன!

"ஒழிந்தது கிளர்ச்சி! இனி ஏது தொடங்குவது?"—தேசியத் தப்பட்டைகள் சலசலப்புச் செய்தன!

"போராம் போர்! எங்கே இருக்கிறது போர்? எப்படி இருக்கும்? போர் ஒழிந்துவிட்டது! ஒழிந்துவிட்டது!—"தகரடப்பாக்கள்" சில தகிங்கிணதோம் போட்டன!

"நிறுத்துவதற்கு ஏதேனும் ஒரு 'சாக்கு' வேண்டும் வேண்டும் என்று தவம் கிடந்தனர், ஐதராபாத் வந்தது, நிறுத்திவிட்டனர் இந்தி மறியல் நாடகத்தை!"—தேசிய நாடகமாடிகள் களிப்புடன் கூவினர்!

நம்மாலே போரைத் தொடர்ந்து நடத்த முடியாது என்று எண்ணி, ராஜதந்திர முறையில், இந்த ஐதராபாத் பிரச்சினையை முன்வைத்து, பெரியார் போரை நிறுத்திவிட்டாரா சார்?—நம்மிடத்தில் அனுதாபமுடைய சில சந்தேகப் பிராணிகள் ஐயவினை எழுப்பின!

"வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்த கதையாக, போர், மும்முரமாக நடக்கிற நேரத்தில், தலைவர் இத்தகைய போர் நிறுத்த உத்தரவைப் பிறப்பித்துவிட்டாரே! ஐதராபாத் சண்டை எந்தக் காலத்தில் முடிவது, நாம் எந்தக் காலத்தில் போரைத் தொடங்குவது? நடக்கிற கதையா, நண்பா, இது?"—திராவிடர் கழகத் தோழர்களிலேயேகூட சிலர் இதுபோல வருத்தத்தோடு பேசிக் கொண்டனர்!

ஐதராபாத்தில் இந்தியத் துருப்புகள் நுழைந்தன—பாலம் ஒன்று பிடிபட்டது—நமது பட்டாளம் 50 மைல் முன்னேறியிருக்கிறது—சிகந்தராபாத் விரைவில் பிடிபடும் என்னும் முதல் செய்தி கிடைத்தவுடனே, பெரியார், இந்தி எதிர்ப்பு தீவிரக் கிளர்ச்சியை, ஐதராபாத் போர் முடியும் வரை, நிறுத்தி வைத்துள்ளேன் என்று, தன் படைவீரர்கட்கெல்லாம் ஒரு தாக்கீது பிறப்பித்தபோது, இதுபோல, பற்பல வட்டாரங்களிலிருந்து கேலி, கிண்டல், நையாண்டி, குத்தல் பேச்சு, சஞ்சலம், சோகம், ஐயம் அத்தனையும் எழுந்தன. ஆனால் பெரியார், "போரை நிறுத்தியது நிறுத்தியதே—அதுவே நியாயம்—ஐதராபாத் சண்டை தீர்ந்ததும் நமது அறப்போரைத் தொடங்குவோம்—எவர் என்ன கூறினும் நமக்கென்ன அதுபற்றி" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

நாம், நமது அறப்போரைத் தொடங்கியபோது, ஐதராபாத் குண்டு வெடிக்கப்போகும் இந்த ஆபத்தான தருணத்தில் நீங்கள் வேறு ஒரு பக்கம் கிளர்ச்சியைத் தொடங்குகிறீர்களே, இது நியாயமா என்று சர்க்கார் கேட்டனர், சர்க்கார் மட்டுமல்ல, நடுநிலையாளர்கள் சிலரும் கேட்டனர். கேட்டபோது, நாம், ஐதராபாத் வந்தால், நாங்கள் போரை நிறுத்திவைப்போம்—அதுபற்றிய கவலை உங்கட்கு வேண்டாம்—ஐதராபாத்துக்கும் இந்தியாவுக்கும் மோதுதல் ஏற்பட்டால் அதுபோது நடந்து கொள்ளவேண்டிய விதம்—முறை எங்கட்குத் தெரியாதா—நிச்சயமாக, அத்தகு நிலை ஏற்படும்போது, எங்கள் போர் நிறுத்தி வைக்கப்படும்" என்று உறுதி உரை புகன்றோம். அந்த உறுதிமொழிக் கேற்பவே, நாம், ஐதராபாத் போர் தொடங்கியதும் நமது அறப்போரை நிறுத்திவைக்க நேரிட்டது

எதிரிகள் கோட்டத்திலிருந்து கிண்டல் பாணங்கள் தொடுக்கப்படும் என்பதை அறியாமல் அல்ல, பகைவர்தம் வட்டாரத்திலிருந்து கேலிச் சொற்கள் கூரிய அம்புகளென நம்மீது வீசப்படும் என்பதை உணராமல் அல்ல, அறப்போரை நிறுத்திவைக்கும் நம் கண்ணியமான நடத்தையை நமது பலவீனத்தின் நிச்சயமான அறிகுறி என்று தேசிய ஏடுகள் திரித்து உரைத்திடும் என்பதை எண்ணிப் பாராமல் அல்ல, இவ்வளவையும் இதற்கு மேலும் எதிர்பார்த்துத்தான் நாம் நமது போரை நிறுத்திவைத்தோம்.

நமது அறப்போர் நியாயம் என்ற பலமான அடிப்படையின்மீது எழுப்பப்பட்டுள்ள கட்டடம். ஆகவே சில பல நாள் போரை நிறுத்திவைப்பதாலே போராட்டத்தின் பலம் குறையாது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே

தான், நாம் மாற்றார்தம் கிண்டலையோ கேலியையோ கண்டு நம் உறுதியிலிருந்து சிறிதும் பிறழ்ந்தோமில்லை, போரை நிறுத்துவது என்ற முடிவிலிருந்து சற்றேனும் மாறினோமில்லை.

இதோ "ஐதராபாத் போர்" முடிந்தது, பள்ளிகளும் திறந்தன, ஈரோட்டு மாநாடும் போர்த் தொடக்க அறிக்கையைத் தந்தது; அறப்போரும் விட்ட இடத்திலிருந்து தொடங்கப் பட்டுவிட்டது.

ஆம்! நவம்பர் 2 முதல் ஆற்றல் மிக்க தமிழர் தம் அறப்போர் மீண்டும் ஆரம்பமாகி விட்டது!

தொடங்கிய போர் ஒவ்வொன்றிலும் வெற்றியன்றி வேறு முடிவு ஏதும் கண்டறியாத பெரியார் பெரும்படை தளபதி அண்ணாவின் தலைமையில் மீண்டும் போராட்டத்தில் இறங்கிவிட்டது!

ஆயிரமாயிரம் இளஞ்சிங்கங்கள், மறுபடியும், தங்கள் சொந்த வாழ்க்கை எனும் குகையிலிருந்து வெளியேறி, அறப்போர்க் களத்திலே கர்ஜிக்கத் தொடங்கிவிட்டன!

போர், நவம்பர் 2 முதல், மும்முரமாக நடைபெறுகிறது.

களம், சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளி!

"களத்திலே இறங்க அனுமதி கொடுங்கள்" என்று தமிழகம் எங்கணும் உள்ள இளங்காளைகளிடமிருந்து நாள்தோறும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, விண்ணப்பங்கள், பெரியார் இல்லத்தில் வந்து குவிந்தவண்ணம் உள்ளன.

"இதென்ன இது! பெரியார் சென்னைவாசிகளுக்கு மட்டுமே மறியல் செய்ய அனுமதி தந்து கொண்டிருக்கிறார்! ஏன் எங்களை ஒதுக்குகிறார்? ஏன் எங்கட்கு அனுமதி தர மறுக்கிறார்? இனி நாங்கள் பொறுக்கமுடியாது. மறியல் அனுமதி பெற்றே தீருவோம்" என்று வெளியூர்த் திராவிடர்கள் துடிதுடித்த உள்ளத்தோடு, பெரியார் மீது "குற்றச்சாட்டு" வீசியவண்ணம் உள்ளனர்!

போர், நாளுக்கு நாள் புது முறுக்கும் பலமும் புது எழுச்சியும் பெற்றுவருகிறது.

"அடடா! எதிர்ப்பு ஒழிந்தது என்றெண்ணினோமே! போர் புசுபுசுத்துப் போய்விட்டது என்று நம்பினோமே! இதோ மீண்டும் போர் தொடுத்துவிட்டனரே தமிழர்" என்று "பாப்பிரம்மங்கள்" கைகளைப் பிசைந்து கொள்கின்றன!

"மறுபடியும் இந்தி எதிர்ப்பா, உண்மையாகவா. ஒழிந்துவிட்டது என்றல்லவா எண்ணினோம்" என்று ஆரிய ஏடுகள் ஆச்சரிய மேலீட்டால் கூவுகின்றன!

## மீண்டும் இந்தி எதிர்ப்பு!

—இதுதான் பாரத தேவி, மெயில், சுதேசமித்திரன், ஹிந்து, தினமணி அத்தனை ஏடுகளும் நவம்பர் 2-ந்தேதி தொடங்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டச் செய்திக்குக் கொடுத்துள்ள தலைப்பு. இந்தத் தலைப்பிலே உள்ள அந்த "மீண்டும்," அவர்கள் எவ்வளவு உறுதியாக நம்முடைய போர் இனி நடைபெறாது என்று நம்பியிருந்தனர் என்பதை நன்கெடுத்துக் காட்டுகின்றது.

"கிளர்ச்சி ஒழிந்துவிட்டது என்றெண்ணினோமே, மீண்டும் வந்துவிட்டதா!"

"போர் புதைந்துவிட்டது என்று நம்பி மோசம் போனோமே! மீண்டும் போராமே!"

"இந்தி எதிர்ப்பு கயா என்று கொக்கரித்தோமே! மீண்டும் இந்தி எதிர்ப்பு மறியல் நடக்கிறதா!"

"தீர்ந்தது தமிழர் எழுச்சி என்று தலையங்கம் தீட்டினோமே! மீண்டும் அதே எழுச்சி முன்னினும் பல மடங்கு வேகத்தோடா?"

"நாயக்கர் தோற்றுவிட்டார்—போரை நிறுத்திவிட்டார் என்று கூவினோமே, மீண்டும் தொடங்கிவிட்டாரா?"

தேசிய ஏடுகளின் உள்ளங்களில் இந்த எண்ணங்கள் நிச்சயமாகத் தவழ்ந்திருக்கும், மறுபடியும் இந்தி எதிர்ப்புப் போர் தொடங்கப்பட்டுவிட்டது என்ற சேதி கேட்டதும்! அந்த ஏடுகள் அத்தனையும் மீண்டும் என்ற ஒரே சொல்லைக் கையாண்டிருப்பது இந்த உண்மையைத்தான் நமக்கறிவிக்கின்றது!

அவர்கள் கூறுவதுபோல மீண்டும் இந்தி எதிர்ப்பு ஆரம்பமாகிவிட்டது! ஆனால் இனி ஒருமுறை மீண்டும் என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது, ஏனென்றால் இம்முறை, கட்டாய இந்தி ஒழிந்தால் ஒழிய போர் நிற்கப் போவதில்லை. ஆம்! ஒன்று, இந்திக் கட்டாயம் ஒழியவேண்டும்! அல்லது நாம் ஒழிய வேண்டும்! இந்த இரண்டில் ஒன்று ஏற்படும்வரை இம்முறை போர் நிற்காது.

தேசிய ஏடுகள் மட்டுமல்ல, ஆளவந்தார்களும் இதை அறியப்படும்!

அறிந்து, மனம் திருந்தட்டும்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் போக்குவது ஒன்றுதானா வேலை?

"எப்போது என் கடன் எல்லாம் தீரும்? எப்போது நான் கரையேறுவேன்?" என்ற எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன கந்தசாமி உள்ளத்தில். அதே நேரத்தில், வாசலில் இருந்து வந்தது ஓர் சப்தம்! "ஆயிமகமாயி அவ, ஆயிரங் கண்ணுடையா!" ஆமாம்! "மாரியாத்தா" வாசலில் நின்றிருந்தாள். அவளை உள்ளே அழைத்தனர் கணவனும் மனைவியும். உள்ளே சென்றாள் மாரியாத்தா! உற்றுப் பார்த்தாள் சுப்பனை! தனக்குள்ளாகவே சிரித்தாள்! சிரித்ததின் காரணம் 'சுப்பன்' கிடந்த நிலைதான். பிய்ந்து போன பாய். அதன் மேல் துவைத்து போடப்பட்டிருந்த வெள்ளைத்துணி. பாயைச் சுற்றி வேப்பிலை. உடம்பெல்லாம் சாம்பல், கையில், மாரியம்மனுக்கு வேண்டிக் கொண்டு நிறைய முடியப்பட்டிருந்த "மஞ்சள் துணி" காணிக்கைகள்!

இதைக் கண்ட மாரியாத்தா ஏன் சிரிக்கமாட்டாள்? ஊரிலே அதிகமாக அம்மை கண்டபோது, அவளும்தான் "இரெகுலேஷன்" செய்துகொண்டாள்! சிரித்தாள்! சிரித்தாளே ஒழிய எடுத்துச் சொல்லவில்லை. தன் இடுப்பில் சொருகி இருந்த விபூதிப் பையை எடுத்தாள். இத்தனை நேரம் பேசாமல் படுத்திருந்த சுப்பன் மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தான். செல்லாத்தாளும், கந்தசாமியும் ஆவலுடன் பார்த்தார்கள். ஆனால் மாரியாத்தா என்ன செய்தாள்? ஒரு கைப்பிடி விபூதியை எடுத்துக் கொண்டு, ஏதோ முணு முணுத்தாள், வேப்பிலைபால் தட்டினாள், ஊதினாள்! அவ்வளவுதான்! கண்ணைத்திறந்தவன் இருகையாலும் கண்ணை இறுக்கி மூடிக்கொண்டு "அம்மா! அப்பா!" என்று கூவினான். 'பிடிசாம்பல்' அவன் கண்ணில் நிறைந்துவிட்டது. இதுதான் அவன் கத்தியதற்குக் காரணம்!

ஆனால் செல்லாத்தாளும், கந்தசாமியும் மகிழ்வுற்றார்கள் அத்தனை நாள் பேசாதவன், "அம்மா! அப்பா!" என்று சொன்னவுடன்! இருவரும் நிமிர்ந்து பார்த்து, "மாரியாத்தாளின் கருணையே கருணை! அருளே, அருள்!" என்று கூறினார்கள். சமயமறிந்து மாரியாத்தாளும், "எங்கே ஆத்தாளுக்குக் காணிக்கை?" என்றாள். கந்தசாமி சட்டைப்பையில் கையைவிட்டான். காலணாகிடந்தது! செல்லாத்தாளைப் பரிதாபமாகப் பார்த்தான். அவள் உள்ளே சென்று மிளகாய்ப் பானையில் கையை விட்டாள். பாசி பிடித்த ரூபாய் ஒன்று கைக்குக் கிடைத்தது. கொண்டுவந்து "மாரியாத்தா"விடம் வெற்றிலைப் பாக்குடன் சேர்த்துக் கொடுத்தாள்; மாரியாத்தா போய்விட்டாள்!

மாரியாத்தா போனதிலிருந்து பிடித்தது சனியன் சுப்பனுக்கு! அலறினான்! அழுதான்! "படுத்துத் தூங்கு கண்ணு. ஆத்தா கோவிச்சுக்கும்! அம்மா நம்மைக் கைவிடமாட்டா!" என்று தேற்றினார்கள். அவ்வளவுதான் அவர்களால் செய்ய முடிந்தது!

* * *

இரவு பதினொரு மணி! ஊர் அடங்கிவிட்டது. ஊருக்கு வெளியே மக்கள் நடமாட்டமில்லாத இடத்தில், பாழடைந்த கட்டிடத்தில் இரண்டு உருவங்கள் பேசிக்கொண்டிருந்தன.

"என்ன வள்ளி இன்னிக்கி உனக்கு யோகம்தான்" என்று சிரித்துக்கொண்டே கூறுகிறான் வேலப்பன்.

யாரிடம் அவன் பேசுகிறான்? ஐயோ! மாரியாத்தாவிடமா? ஆம்! மாரியாத்தாவேதான். ஊராருக்கு மாரியாத்தா! வேலப்பனுக்குக் கண்ணாட்டி! ஏன் இருக்கமாட்டாள்? இப்போது அவள் இருக்கும் கோலம் நன்றாக வாரி முடியப்பட்ட கூந்தல்! அதன்மீது நின்று நர்த்தனமாடும் மல்லிகை மலர்கள்! விளக்க நெற்றியில் வட்டமான சிறு குங்குமப் பொட்டு! மயில் நிற ஜாக்கட்! மங்களூர் சேலை! காதிலே தோடு! கழுத்திலே செயின்! அழகின் சின்னமாகக் காட்சி அளித்தாள் அவள்! அதில் வியப்பதற்கென்ன இருக்கிறது? வயது இருபத்தி நான்குடைய அழகிய இளமங்கை, பகலிலே "மாரியாத்தா"வாக இருந்தாலும் இரவிலே "வள்ளி"யாகத் தானே இருக்க முடியும்! இயற்கை உணர்ச்சியை, இளமை இன்பத்தை அவளால் ஏமாற்ற முடியவில்லை மக்களை ஏமாற்ற முடிந்தாலும்! வேலப்பன், மண்டி மகாலிங்க முதலியார் கடையிலே ஒரு குமாஸ்தா! அவன் அப்படி ஒன்றும் மன்மதன் அல்ல! ஆனால் அவனுடைய அரும்பு மீசையும், கட்டுமஸ்தான தேகமும், புன்முறுவல் பூத்த முகமும், புத்தொளி வீசும் கண்களும், தென்றல் போன்ற சொற்களும், தேன் போன்ற நடத்தையும் எந்த "ரதி"யையும் அவன் பால் ஈர்க்கும் தன்மையனவாகவே இருந்தன. ஆகவேதான் மாரியாத்தா — மாரியாத்தா அல்ல அவளுடைய உண்மைப் பெயர், வள்ளி! — அவனிடம் சொக்கிப் போய்விட்டாள்! அழகு அழகை விரும்பிற்று! வள்ளி வேலனை அடைந்தாள்! "வள்ளி திருமணம்" நடந்தது— ஊராரின் கொட்டு முழக்கத்துக்கும் பலமான மேளத்திற்கும் பந்தல் அலங்காரத்திற்கும் வாழ்த்துத்தாள் வாசிப்புக்கும் இடையே அல்ல! வள்ளி — வேலன் உள்ளத்திற்கிடையே! மணம் நடந்தது ஆனால் பணம், வேண்டுமே வாழ்க்கைக்கு! ஆகவேதான் வேலன் குமஸ்தாவாக இருந்தான்! அது மட்டும் போதாது என்றெண்ணினாள் வள்ளி! தானும் சம்பா

மூல வியாதிகளுக்கு
"யௌவன பிராஷ்"
(கருணைக் கிழங்கு லேகியம்)
ஆபரேஷன் பயன்தராது. மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு, பவுத்திரக் கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம்.
12 நாள் யௌவன பிராஷ் ரூ. 3
(காலை சாப்பிட)
12 நாள் நாகபஸ்பம் ரூ. 2
(மாலை சாப்பிட)
சரஸ்வதி வைத்தியசாலை
பழனி S. I.

திக்க எண்ணினாள்! ஆகவேதான் மாரியாத்தா உத்யோகம்!

இது அடுக்குமோ என்பீர்கள் நீங்கள்! ஆகுமா இந்தப் போக்கு என்று கேட்பீர்கள்! ஆனால், வள்ளி—ஏழைப் பெண், ஆகவே தைரியமாகக் கேட்கிறீர்கள் இது நியாயமா என்று! ஆனால் ஊர் முழுதும் எத்தனை எத்தனை பெரிய மனிதர்கள் கள்ளமார்க்கட் கழுகுகளாக இருக்கிறார்கள்—அதே பணத்தைக்கொண்டு பிறகு கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து, தர்மகர்த்தாக்களாக ஆகிறார்கள்! கேட்டதுண்டா நீங்கள் இது நியாயமா என்று? கேட்பீர்களா? கேட்க முடியுமா? கேட்டால் சூனாமானா என்ற பட்டமல்லவா கிடைக்கும் உங்களுக்கு?

* * *

“ஐய்யய்யோ, தாயே! கைவிட்டுட்டையே! என் வீட்டு விளக்கை அணைச்சுட்டையே! உன்னைத் தானே நம்பியிருந்தேன். இப்படித் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டையே! மாரி! மகமாயி!” என்று மார்பில் அடித்துக் கொண்டு அலறுகிறாள் செல்லாத்தா. கந்தசாமியின் கண்களிலே கண்ணீர் வழிகிறது. சுப்பன் கண்ணை மூடினவன் மூடியே விட்டான்! அன்னையும், தந்தையும் தனயனைத் தவறவிட்டு கதறினார்கள்.

“மாரியாத்தா! தாய்! தாயா அவள்? கல்லும் கரைந்துடும். அந்தப் பாவியின் மனம் இரங்கலியே? அவளுக்குத்தான் எல்லாம் செய்தேனே. என்ன கேடு? என் மகனைக் காப்பாத்த மனம் வரலியா? நீயும் ஒரு தெய்வந்தானா?!” என்று கோபமாகக் கூறினான் மகனை இழந்தவன்.

“ஆத்தாவை அப்படியெல்லாம் சொல்லாதிங்க அம்மா உக்ரமாச் சினா ரொம்பக்கெடுதல்! என்னமோ நாம்ப கொடுத்துவச்சது அவ்வளவுதான்! நம்பசெய்த பூர்வ ஜென்ம பாபம்!” என்ற வார்த்தைகள் செல்லாத்தாவின் வாயிலிருந்து துக்கத்திற்கிடையேயும் வந்தன! அவள் அப்போதும் கூட மாரிமீது தோஷம் சொல்ல ஒப்புக்கொள்ளவில்லை!

சுப்பன் சுடுகாட்டிலே! சுப்பன் மட்டுமா அவன் அப்பன் கந்தசாமி கூட அதுபோலவேதான் வாழ்ந்தான்! ஏன்? அதோ, வீட்டு வாசலிலே “சேட்ஜீ” வாசு தேவலால் ‘ஜப்தி’ நோட்டீசுடன் தான் வாங்கிய கடனும் வட்டியும் சேர்ந்து இருநூறு ரூபாய்க்கு காத்துக் கொண்டிருக்கிறான் என்பது கந்தசாமிக்குத் தெரியும். தெரிந்த உடனேயே இரும்புப் பெட்டியைத் திறந்து எடுத்துக் கொடுக்கப் போகிறானா? இல்லையே! அவன் பஞ்சை! பராரி! அவனுடைய வரண்ட கண்களால் சேட்டைப் பார்த்து “இன்னும் இரண்டே நாள். பொருத்துக்கனும், என் மகனும் செத்துட்டான்.” என்றான். ‘சேட்’ என்ன நினைத்தானோ, போய்விட்டான். கந்தசாமி ஓடினான் தன் கடை முதலாளியிடம். “டேய், உனக்குப் பைத்தியமா? நீ ஏண்டா அவ்வளவு பணம் கடன் வாங்கணும்! பெரிய மகாராஜனா நீ! பட்டாதாண்டா தெரியும், படு! போ! போ!” இந்தப் பதில்தான் கந்தசாமிக்குத் தரப்பட்டது. இரண்டாம் நாள், வீட்டிலுள்ள சாமான்கள் காலியாகிவிட்டன! கடன் கொடுத்த ‘வாசுதேவலால்’ ஜப்தி செய்து விட்டான். அதோடு நின்று விட்டதா அவன் வாழ்வு. அதோ மற்றுமொரு அழைப்பு! அரசாங்க ‘வாரண்ட்’! அம்மை வந்திருந்த போது சுகாதார அதிகாரிகளின் செய்கைக்கு இணங்காததின் பலன்!

கூண்டிலே கந்தசாமி! பக்கத்திலே செல்லாத்தா! நீதிபதி கூறினார், “அரசாங்கத் திட்டத்தை மதிக்காது, அதை மறுத்துவிட்டதால் கந்தசாமி கட்டவேண்டிய அபராதத்தொகை ரூ 50! தவறினால் ஆறுமாத கடுங்காவல்!”

கந்தசாமி கதறினான்! செல்லாத்தாவின் அடிவயிற்றிலிருந்து வந்தது “அய்யோ” என்ற சொல்! நீதிமன்றம் கலைந்தது. அவள் சென்றுவிட்டாள் தன்னுடைய தகப்பன் வீட்டுக்கு! கந்தசாமி சிறையிலே! செல்லாத்தா காலச் சிறையிலே!

* * *

மீண்டும் பாழடைந்த கட்டிடம். இரவு மணி ஒன்று! வேலனும் வள்ளியும் பேசிக்கொள்கின்றனர்.

“வள்ளி! கந்தசாமி மகன் சுப்பன் செத்துப் போயிட்டானாமே!”

“ஆமாம்! கேள்விப்பட்டேன்!”


## நீங்கள் படித்து விட்டீர்களா?

| | ரூ. | அ. |
|---|---|---|
| தமிழன் தொடுத்த போர் | 1 | 12 |
| ஆரியத்தால் விளைந்த கேடு | 0 | 6 |
| திராவிடம் என்றால் என்ன | 0 | 6 |
| சித்திரபுத்திரன் (பெரியார்) | 0 | 6 |
| புதியதோர் உலகு (பெரியார்) | 0 | 6 |
| ஈரோட்டுப் பாதை (இளஞ்செழியன்) | 0 | 6 |
| திராவிடஸ்தான் வேண்டாமா | 0 | 8 |
| காரல் மார்க்ஸ் | 1 | 0 |
| எது இசை | 0 | 6 |
| திராவிடர் நாகரிகம் | 0 | 10 |
| தமிழர் யார் | 0 | 8 |
| ஆரியர் தமிழர் கலப்பு | 0 | 8 |
| தமிழ் பழமையும் புதுமையும் | 0 | 8 |
| தேன் கூடு (கவிதை) | 0 | 2 |
| தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா | 0 | 4 |
| பெண்ணே பெரியவள் | 0 | 8 |
| பெண்கள் உலகம் | 0 | 12 |
| மனிதன் எப்படித் தோன்றினான் | 0 | 8 |
| தமிழரின் மறுமலர்ச்சி | 0 | 8 |
| தமிழர் சமயம் | 0 | 8 |
| ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| மரணத்தின்பின் | 0 | 8 |
| சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| இந்தியாவில் சோஷலிசம் | 0 | 12 |
| இந்துமதம் தமிழர் மதமா | 0 | 8 |
| தமிழர் சமயம் எது | 0 | 8 |
| கவிஞர் விழா | 0 | 6 |
| புரட்சிப் பெண் | 0 | 8 |
| திராவிட மொழிகளும் இந்தியும் | 0 | 6 |

தபால் செலவு
தனித்தனி 0 1 0

**பகுத்தறிவுப் பாசறை**
147, பவழக்காரத் தெரு,
சென்னை 1.

"நீ கூட விபூதி போட்டையாம், பின்ன ஏன் பொழைக்கலே?"

"நான் என்ன கடவுளா? எப்பவும் செய்யறுப் போல நான் செஞ்சுட்டேன். அவ்வளவுதான் என் வேலே! நான் கூடத்தானே 'அம்மை' குத்திக்கிட்டேன்."

* * *

சிறைக் கதவு திறந்து, கந்தசாமி வீட்டிலிருக்கிருன். மாரியம்மன் கோவிலில் "டாண்—டாண்" என்ற மணியோசை கேட்கிறது. அப்போது செல்லாத்தா, "என்னங்க, இன்னிக்கி மாரியாத்தாளுக்கு சந்தனக் காப்பு. நம்ப செட்டியார்தான் செய்திருக்கிருராம். வாங்க போய் பார்த்துட்டு வரலாம்." என்று அழைக்கிருள். கந்தசாமி சொன்னுன்:—ஏம்புள்ளே! உனக்கு இன்னுமா அறிவு வரல்லே? புள்ளேயை வாரிக்குடுத்தாச்சி. மாரிக்கு, என் மகன் பிழைக்கனும்னு என்னென்ன செய்தேன்! கொஞ்சமாவது கருணை இருந்திச்சா அந்த அம்மனுக்கு? என் மகன் உயிருபோனது, கடன் தீர்க்கனும்னு செட்டியார் கிட்டே பணம் கேட்டப்போ 'இல்லே'ன்னு சொல்லிவிட்டார். அதே செட்டியார் இப்போ செய்யராரும், சந்தனக்காப்பு! சந்தனக்காப்பு தானு செய்வாரு, இன்னும் ஒரு இரண்டாயிரம் கொள்ளே வந்தின்னு தங்கக் காப்பு கூட செய்வாரு. அதைப்போய் நாம் பார்க்கனுமா? யார் எப்படிப் பட்ட 'பக்தி' செய்பருங்கன்னு "அம்மன்' அறிய முடியாட்டி அது கடவுளா இருக்க என்ன தகுதி, யோக்கியதை? போடி, போ, போய் வேலேயைப் பாரு.. ........"

உரக்கக் கூவிக் கொண்டிருந்தான் கந்தசாமி இதுபோல! வீதி வழியே வள்ளி, "மாரியாத்தா" வாக, சென்று கொண்டிருந்தாள். அவள் காதில் கந்தசாமியின் வேதனை உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட இந்த சொற்கள் வீழ்ந்தன. அவளுடைய சிந்தனை வேகமாக சுழன்றது. கந்தசாமியின் மகன் சுப்பன் படுக்கையில் அம்மைவார்த்துக் கிடப்பது, தான் சென்று அவனைப் பிழைக்க வைப்பதாகச் சொல்லி விபூதி மந்திரித்துக்கொடுப்பது, கந்தசாமியின் மனைவி உள்ளே சென்று பானையில் ஒளித்துவைத்திருந்த ஒருரூபாயை எடுத்துவந்து தன்னிடம் தந்தது, பின் ஓர் நாள் சுப்பன்—அவர்களுடைய குழந்தை செத்தது, கந்தசாமியின் சிறைவாசம்—இந்தக் காட்சிகள் ஒவ்வொன்றும் மாறி மாறி அவள் மனக் கண்முன் தோன்றித் தோன்றி அவளேப் பார்த்து நகைக்கலாயின. அசைவற்று நின்றுவிட்டாள் அவள்.

"ஐயோ பாவம்" என்ற ஒரே ஒரு வார்த்தை அவள் வாயிலிருந்து வீழ்ந்தது. அடுத்த கணம் "ஆ! என்ன மோசம் செய்தேன்!" என்று கூறியவண்ணம் தரையில் சாய்ந்தாள் வள்ளி — அல்ல — மாரியாத்தா!

* * *

"எல்லாம் எட்டி நில்லுங்கள் எல்லாம் எட்டி நில்லுங்கள்!"

"மாரியாத்தா கோவிச்சுக்கும் தூரப் போங்கோ! தூரப் போங்கோ!"

"விலகி நில்லுங்கோ! விலகி நில்லுங்கோ!"

"என்ன குற்றம் செய்தோம் தாயே! ஆடு வேணுமா கோழி வேணுமா ரத்த பூசை போடறோம் தாயே!"

அன்னம் கண்விழித்துப் பார்த்தாள். சுற்றிலும் "பக்தர்கள்" கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர்! தாயே அபசாரம் தாயே அபசாரம் என்று வள்ளியைப் பார்த்து அவர்கள் தம்தம் கன்னங்களில் அறைந்து கொள்கின்றனர். மாரியாத்தா மீது மாரியம்மன் "வந்து" மூர்ச்சையாகி வீழ்ந்துவிட்டாள்— "அம்மனுக்கு கோபம் நம்ம மீது— என்ன ஆகுமோ, இனி ஏது நேருமோ?" என்று அச்சத்துடன் பேசிக் கொள்கின்றனர் மக்கள்.

மாரி பார்த்தாள். நகைத்தாள். அட முட்டாள்களே என்று கூவி அழைத்தாள். கேளுங்கள் நான் சொல்லுவதை என்று சொல்லி, மடமடவென்று பேசிக்கொண்டே போனுள்:—"பைத்தியக்காரர்களே இதோ பாருங்கள்! நான் மாரியாத்தா அல்ல! இத்தனை நாள் நான் போட்டுக் கொண்டிருந்தது அத்தனையும் வேஷம். உங்கள் மூட நம்பிக்கையை என் பிழைப்புக்கு வழியாக வைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் ஏமாந்தீர்கள், நான் ஏமாற்றினேன். நீங்கள் அச்சப்பட்டீர்கள், நான் அச்சமூட்டினேன். நீங்கள் மாரி மாரி என்று கூவினீர்கள். நான் பணம் பணம் என்று உங்களிடமிருந்து பணம் பறித்தேன். என்னேத் தெய்வப் பிறவி என்று நீங்கள் நம்பினீர்கள், நானே அந்த நம்பிக்கையை "கைமுதலாகக்" கொண்டு முதல் இல்லாத வியாபாரம் செய்துவந்தேன். மூடர்களே! எனக்குக் கணவன் உண்டு, எனக்கும் வாழ்க்கை உண்டு, எனக்கும் வாழ்க்கை இன்பங்களேத் துய்க்கும் ஆசை உண்டு. உங்களுக்குத் தெரியாது, ஜவுளிக்கடை வேலாயுதம் அவர்


## புதிய வெளியீடுகள்!

தயார்! தயார்! விற்பனைக்குத் தயார்!

**அறிஞர் C. N. அண்ணுதுரை M. A.**

எழுதிய

வடநாட்டுச் சுரண்டலை விளக்கிக்காட்டும்

## பணத்தோட்டம்

விலை ரூ. 100

**தோழர் இரா. நெடுஞ்செழியன் M. A.**

அவர்கள் மொழிப் பிரச்சினையை விளக்கும்

## மொழிப் போராட்டம்

விலை ரூ. 100

**திராவிடப் பண்ணை**

தெப்பக்குளம் :: திருச்சி.

கள் என் கணவர். விவாகம்
நடக்கவில்லை, ஆனால் எங்கள்
உள்ளம் ஒன்று பட்டது. கணவ
னும் மனைவியுமானோம். நான் மாரி
யாத்தாவாக இருந்தேன். ஆகவே
எங்கள் வாழ்க்கை இரகசியமாக
இருந்தது. இனி நான் மாரி
யாத்தா அல்ல, வள்ளி! ஆம்
வள்ளி! அதுதான் என் சொந்தப்
பெயர்! இனி நான் என் சொந்தப்
பெயரிலேயே உலவுவேன். மூட
நம்பிக்கையை விரட்டுவேன். மாரி
யம்மன் என்னும் பித்தலாட்டத்தை
தூள் தூள் ஆக்குவேன். இதோ
இந்த வீட்டில் இருக்கிற கந்தசாமி
யின் மகன் சுப்பனுக்கு அம்மை
இருந்தபோது மந்திரித்தேன்! அம்
மை மந்திரத்திற்குக் கட்டுப்பட
வில்லை—எப்படி கட்டுப்படும் —
அம்மை ஒரு நோய்—நோய் மருந்
துக்குப் பயப்படுமே தவிர மந்திரத்
திற்கா பயப்படும்—அம்மை வளர்ந்
தது—மாண்டான் சிறுவன்—கந்த
சாமி தன் மகனுக்கு அம்மை குத்
திக்கொள்ள மறுத்த குற்றத்திற்
காக சிறைப்பட்டான்—இதோ
சிறை மீண்டுவந்தான் புத்தறிவு
பெற்றவனாக—வேதனை மிக்க உள்
ளத்தோடு அவன் வீசிய உரை
களைக் கேட்டான்—நான் செய்து
வரும் "மாரியாத்தா" தொழில்
எவ்வளவு பாதகமானது என்பது
என் மனதை வாட்டிற்று—மூர்ச்
சித்து வீழ்ந்தேன்...எழுந்தேன்,
புதிய உள்ளம் பெற்றேன், இனி
நான் உங்களை ஏய்த்துப் பிழைக்க
மாட்டேன்......"

மக்கள் மருண்ட கண்களோடு
அவளையே உற்றுப் பார்த்தனர்.
அவளோ அவர்களைச் சிறிதும்
லட்சியம் செய்யாது, பேசிக்
கொண்டே போனாள் :—

"மாரி ஒரு கற்பனை. பேய் ஒரு
கற்பனை. பிசாசு ஒரு கற்பனை.
அரசமரத்துப் பூதமும், ஆலமரத்து
முனியாண்டியும் கற்பனை. இந்தக்
கற்பனைகளுக்கு இனி பயப்படாதீர்
கள். வாருங்கள் பகுத்தறிவுக்
கழகம் அமைப்போம். புத்தறிவு
பெறுவோம். மடமையை விரட்டு
வோம். மனிதர்களாகவாழ்வோம்."

ஆச்சரியமடைந்த மக்கள், தங்கள்
"மாரியாத்தா" ஏதேதோ பேசுகி
றாள் என்று திகைத்தனர். ஆனால்
அவள் சொன்னாள் :

"வாருங்கள் தோழர்களே! இனி
கவலையில்லை. மாரியாத்தா நம்
மைப் பொறுத்தவரை மாண்டு
விட்டாள்! அவளுக்குப் பிரதிநிதி
யாக இருந்த நான் சாதாரண
வள்ளி ஆகிவிட்டேன்!......

"வள்ளி எங்கள் தலைவி"
என்று கூவினான் ஓர் இளைஞன்.
ஆம் ஆம் என்றனர் மற்ற இளை
ஞர்கள். அவர்கள் முகத்திலே
எல்லாம் புதியதோர் களை தாண்
டவமாடலாயிற்று.

முதியவர்கட்கு அந்த இளைஞர்க
ளின் பேச்சு புரியவில்லை. இளைஞர்
கள் முகத்திலே தாண்டவமாடும்
புதுஒளிக்குப் பொருள் என்னஎன்
பதும் அவர்கட்குத் தெரியவில்லை.
அவர்கட்குத் தெரியாவிட்டால்
என்ன? தெரிந்தால்தான் என்ன?

"இளைஞர் உலகம் உண்மையை
உணர்ந்தது-அது போதும்" என்று
தனக்குத் தானே சொல்லிக்கொண்
டாள் மாரி.

——

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிக்காரர்கள் ஜட்ஜிகளை வசியம்
செய்ய மந்திரித்தகுங்குமத்தையாகி
லும், குளிசத்தையாகிலும் தரித்துக்
கொண்டு ஜட்ஜ் முன் நிற்கப் பார்க்
கலாம். இப்பழக்கங்களின் அந்த
ரங்க தாத்பரியம் என்னவெனில்
மந்திரத்தால் சிறு தேவதைகளை
வசியம்செய்து அந்த தேவதையை
அந்த குளிசத்தில் புகச்செய்து
அந்த தேவதையின் சக்தியைக்
கொண்டு, வேண்டிய கோரிக்
கையை நிறைவேற்றிக் கொள்வ
தென்ற நினைவுபோலும்!

நான்கு சந்து சந்திக்கும் இடங்
களில் சில உயிரைக் கொன்று,
அங்கு அதன் இரத்தத்தை, குங்கு
மம், மஞ்சள், ஓணன்வால், அல்
லது முயல் காதுடன், புதைக்கும்
பழக்கம் அதிகமாக பட்டணங்களி
லும் பார்க்கலாம். சந்திக்கும் சந்
துகளுக்கும் கோரிய கோரிகைக்கக்
கும். என்ன சம்பந்தமென்றும்
தெரியவில்லை. நாலா பக்கங்களிலி
ருந்து வரும் ஜனங்களில், தங்கள்
விரோதியும் வருவான் என்ற எண்
ணமாக இருக்கலாம்! புதைத்த
வஸ்துக்களுக்கும், நான்கு சந்து
சந்திப்புக்கும், வயிற்றுக் கழிச்ச
லுக்கும், என்ன சம்பந்தமென்றும்
விளங்கவில்லை. சில சூனியக்காரர்
களை (Sorcerers) விசாரித்ததில்,
புதைத்த சாமான்கள் அழுகும்
மாதிரி, எதிரியும் அழுகிப் போவா
னாம்! இது என்ன விந்தை! இதை
சாமான்ய மக்கள், கேட்டு, மயங்கி
விஷயங்களின் சம்பந்தங்களை அறி
யாமல், பல எண்ணங்களிலும்
மனதைச் செலுத்தி மோசம்
போகும் விநோதமே விநோதம்!
இவைகளைச் செய்து பிழைக்கும்
மனிதர்களை விலங்கிட்டு தண்டிக்
கும் வரை, இந்த அகோர எண்
ணங்கள், பழக்கத்தில் வந்து
கொண்டே இருக்கும். இதனால்
பலவாயிரம் ஏழை மக்கள் ஏமாந்து
கொண்டே போவார்கள். பல
உயிர்களுக்கும் நாசமுற இடம்
கொடுக்கின்றது.

ஆங்கிலேயர்கள் 13-வது எண்
ணைக்கண்டு (Number 13) பயப்
படுவதும் ஓர் அதிசயம். சிற்சில
எண்கள், மகத்துவம் அடைந்து
இருப்பதைப் பார்த்தால் ஆச்சரிய
மாகவே இருக்கின்றது. மும்மணி,
மும்மூர்த்தி, மூன்று உலகம் கீழ்,
மேல் நடு என்று 3-க்கும் பஞ்ச
லோகம், பஞ்ச சீலம், பஞ்சமாபா
தகம் என 5-க்கும், எழுகால், எழு
மேகம், ஏழு ரிஷிகள், ஏழு வர்ணம்
என 7-க்கும், ஒன்பது நவக்கிரகங்
கள், ஒன்பது வாரம் என 9-க்கும்,
பன்னிரண்டு மாணாக்கர்கள்,
(Twelve Disciples) பன்னிரண்டு
நட்சத்திரங்கள், பன்னிரண்டு
மாதங்கள் என 12-க்கும், இவ்வித
மான சிற்சில கணிதங்களும் (Num
bers) பிரக்யாதிகொடுத்துள்ளனர்.
இதுவும் ஓர் சொல் பழக்கம். இந்த
எண்கள் சோதிடத்தில் அதிகமாக
உபயோகப்படும். இவ்வெண்
களைச் சொன்னால் அதன் மேல்
சோதிடன் (Astrologer) அந்தக்
கணக்கிற்கு ஒத்த நடவடிக்கை
களைச் சொல்கின்றான். இவை
யாவும் ஓர் வித பித்தலாட்டம் என
அறிக. எண்களுக்கும், நமது நட
வடிக்கைகளுக்கும் என்ன சம்பந்
தம் எனக் கேட்கின்றேன். நம்
முடைய சௌகரியத்திற்கும், அவ
சரத்திற்கும் சுருக்க உரைத்தலுக்
கும் (Our Ccnvenience quick-
ness and brevity) ஏற்படுத்திக்
கொண்ட எண்களை மகத்துவப்படுத்
துவதென்றால் இதைவிட பயித்தியக்
காரத்தனம் உலகில் ஒன்றுமில்லை.

சோதிடம், மந்திர தந்திரங்கள்,
பில்லி, சூன்யாதிகள், பூசை,
நைவேத்தியம், பிரார்த்தனை,
(Prayer) முதலிய பழக்கங்கள்
தொழில் புரியாமல், எளிதில்
பலனை அனுபவிக்க நேரிடும் சோம்

# வருந்துகின்றோம்

நமது உழுவலன்பரும் கெழுதகை நண்பருமாகிய
**இராதா மணாளன்** அவர்களின் அருமைத் தந்தையார்
அண்மையில் இயற்கை எய்தினார் என்பதறிந்து மிக
மிக வருந்துகின்றோம். சென்ற இரண்டு மாத கால
மாகவே அன்னார் சென்னைப் பொது மருந்தகத்தில்
(General Hospital) படுத்த படுக்கையாய் இருந்து
மருந்தருந்தி வந்தார், நண்பர் இராதாமணாளன்
இரவும் பகலும் அவருடன் கூடவே இருந்து அவர்க்கு
உறுதுணை புரிந்து வந்தார். அதன் காரணமாகவே
சில பல நாட்களாக இராதாமணாளனின் சிறந்த எழுத்
தோவியமாகிய "மனப்புயல்" போர்வாளில் இடம்
பெற இயலாது போய்விட்டது. தந்தையார் நலம்
பெற்றுவிட்டார்—கிராமத்திற்கு அழைத்துச் சென்
றிருக்கிறேன்—ஓய்வு பெற்று வருகிறார்—விரைவில்
அவருடன் சென்னை வருவேன் என்று இராதாமண
ளன் நமக்குக் கடிதம் தீட்டினார். நலம் என்ற செய்
யுணர்ந்து மகிழ்ந்திருந்த நம் உள்ளம், அடுத்த நாளே
"தந்தை மறைந்துவிட்டார்" என்று இராதாமணாளன்
தீட்டிய கடிதம் வரக்கண்டு, மிகவும் வருந்துவத
யிற்று. நண்பர் இராதாமணாளனுக்கு நாம ஆறுதல்
மொழிகூற விரும்பவில்லை—அது வீண் வேலை—அவ
பகுத்தறிவுவாதி ஆகவே பிறந்தவர் மரணம் எய்த
வது இயற்கை என்பதை நன்குணர்ந்திருப்பார், தம
ருத் தாமே ஆறுதல் பெற்றிருப்பார். எனவே தந்தை
யார் முடிவெய்தியது நினைந்து மனம் உடையாமல்
நண்பர் இராதா தம் இயக்கப் பணியையும் எழுத்துத்
தொண்டையும் மேலும் மேலும் தொடர்ச்சியாக
ஆற்றி வருவார் என நம்புகிறோம். இடையே வாசகர்
கட்கு ஒரு சேதி: 'மனப்புயல்" அடுத்த வாரம் முதல்
போர்வாளில் தொடர்ந்து வெளிவரும்.

பேறிகளுக்கு ஏற்பட்ட மோச
வித்தைகளாகும்.

செல்வமும், சம்பத்தும், வெற்றி
யும் அடைய வேண்டுமானால் கஷ்
டப்பட்டு உழைக்க வேண்டும்.
எல்லாமதங்களும், எல்லா மந்திரங்
களும், எல்லாப் பிரார்த்தனைகளும்
இவ்விதம் உழைக்க மனமில்லாத
சோம்பேறிகளுடைய கோரிக்கை
களுக்கு ஓர் வித பரிகாரம்
கொடுக்க ஏற்பட்டவை. மனித
னுடைய மூடக் கோரிக்கைகளுக்கு
ஆறுதலையுண்டாக்க ஏற்பட்டவை.
உலகத்தில் எதையாகிலும் பெற
வேண்டுமானால் கஷ்டப்படவேண்
டும். மழைத் தண்ணீரைக் கட்ட,
உழுது பயிரிட, துணிகளை நெய்ய,
கப்பல் கட்ட, யாத்திரை செய்ய,
கல்வி கற்க, மற்றும் பல காரியங்
கள் செய்ய மெய் வருந்த உழைத்தே
தீரவேண்டும். மந்திரத்தால், தந்தி
ரத்தால், சோசியத்தால் எந்தப்
பட்சியும் எந்த உயிரும் வாழ்வுக்கு
வேண்டியவைகளைப் பெறுகிற
தில்லை. பெறவும் முடியாது. உலக
முழுமையுமுள்ள ஜீவராசிகள்
மெய் வருந்தி இரவும் பகலும் கஷ்
டப்பட்டே ஜீவித்து வருகின்றன.
விஞ்ஞானப் பயன்கள் யாவும்
மெய்வருந்த கஷ்டப்பட்டமையால்
தான் இன்று மனிதர்கள் அடையப்
பெற்றுள்ளார்கள். ரயில்வேக்க
ளும், வானூர்திகளும், பேசும்
யந்திரங்களும், மின்சார வண்டிக
ளும், மின்சார விளக்குகளும் பல
வருஷம் கஷ்டப்பட்டன்றோ கண்டு
பிடிக்கப்பட்டன? "எண்ணைச்
சொல்லு, ஐந்துக்குக் குறையச்
சொல்லு," என்று கேட்டு ஓலைச்
சீட்டைப்பார்த்து, உனக்கு வானூர்
திகள் கண்டுபிடிக்கச் சக்தியுண்
டாகு மென்றனலா வானூர்தி
கள் வந்தன? 1874-ம் வருஷ
முதல் நாளதுவரை கஷ்டப்பட்டுக்
கொண்டு வருகிறபடியால் ஒவ்
வொரு நாளும் ஒவ்வொரு அபாயத்
தினின்று மீண்டு வருகின்றோம்.
எந்த சோதிடக்காரன் இந்த அபா
யங்களைத் தெரிந்து முன் எச்
சரிக்கை செய்கின்றான்? பூகம்பத்
தால் பூமி அதிர்ச்சியால் ஆயிரக்
கணக்கான மக்கள் திடீரென மடி
கின்றார்கள். இதன் ஆதாரங்களைக்
கண்டுபிடித்து முன் எச்சரிக்கை
செய்ய பல தேசங்களில் பூமி
அதிர்ச்சி நூலோர் மெய்வருந்த
உழைத்து வருகின்றார்கள். மழை,
இடி, மின்னல், புயல், பனி எந்தக்
காலத்தில் வருமென்று முன்
அறிக்கையிட, கடந்த 50 வருஷ
மாக உலகந்தோறும் வான
நூலார்காற்று, மழை இரவு பகலெ
னப் பாராமல் கஷ்டப்பட்டுக்
கொண்டே வருகின்றார்கள். இவ்
வளவு கஷ்டப்பட்டு வந்தும் இயற்
கை அவர்களுக்கு இடம் தருவ
தாகக் காணோம். விடா முயற்சி
கொண்டு உழைத்து வந்தால்
அன்றோ, எந்தப் பயனும்பெற முடி
யும்? இதை விட்டு விட்டு சோம்பித்
திரியும் சில தனவந்தர்கள் "என
க்கு அந்த ஜோஸ்யன் சொன்
னான், இந்த ஜோஸ்யன் சொன்
னான்" என்று ஏழை மக்களை
ஏமாற்றுவதைக் கண்டால் யாருக்
குத்தான் மனம் பொறுக்கும்?

நட்சத்திர சம்பந்தத்தால் உலக
செல்வாக்கும், சம்பத்தும், செல்வ
மும், அறிவும், ஞானமும், பிரக்
யாதியும் கிடைக்குமென்றால் எவ்
வளவு பேருக்கோ கிடைத்திருக்
குமே? செல்வமும் செல்வாக்கும்
முதலில் பெற்றவர்கள் அவர்களு
டைய திறமையால் அடையப்பெற்
றார்களே யொழிய நட்சத்திர சம்
பந்தத்தாலோ அல்லது மந்திரத்
தாலோ அல்லது எண்ணங்
களாலோ பெறவில்லை யென்பது
மக்கள் அனுபவம்.

நம்முடைய நடத்தை நமது
வழக்க வொழுக்கங்களாலும் நமது
தாய் தந்தையர், சுற்றத்தார், உற
வினர் சிநேகிதர் அடுத்தவர்களு
டைய கூட்டுறவாலும் சம்பந்தப்
பட்டு இருக்கின்றனவே யொழிய
கோடி மைலுக்கப்பால் மினுக்
மினுக்கென பிரகாசிக்கும் நட்ச
திரங்களால் ஒன்றும் ஆவதில்லை.
திருஷ்டாந்தம் வேண்டுமானால்
மெழுகுவத்தி ஒன்றை அடுத்த
அறையில் கொளுத்தி வைத்து அத
னால் நமது நடத்தையோ நடவடிக்
கையோ பாதிக்கப்படுகிறதா
என்று பாருங்கள்! இல்லையானால்
அதே வெளிச்சத்தைத் தரும் நட்
சத்திரங்களால் நமது நடத்தை
பாதிக்கப்படுவது என்ன நிச்
யம்?

அதே மாதிரி அடுத்த வீட்டுக்
காரன் கோழி இறைச்சியையும்
தவளை இறைச்சியையும் தின்பது
நமது வீட்டுப் பிள்ளைகளுடைய
சுகத்தை எப்படிப் பாதிக்கும்?

(4-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon